2016 பிப்ரவரி 17]

48—

அரசு சேவை இல்லம்

*57761—**திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் அரசு சேவை இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டத்தில் அரசு சேவை இல்லம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.1,88,674 கோடி பட்ஜெட்டில் ரூ.61 ஆயிரம் கோடிக்குமேல் சமூக நலத் திட்டங்களுக்கு, குறிப்பாக* Direct Asset Transfer *என்று சொல்லப்படும் நேரடியாகப் பயனாளிகளுக்கு கிடைக்கக்கூடிய திட்டங்களுக்குச் செலவு செய்ய ஆணையிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அண்மையில் சென்னை வந்திருந்த* Muhammad Yunus *அவர்களும், அண்மையில் எடுக்கப்பட்ட* London Business School Survey-*ல் சொல்லியிருக்கிற விஷயமும், வெகுவிரைவில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கும் மக்களை மேலே கைதூக்கிவிடக்கூடிய, உன்னதமான கருவிதான்* Direct Asset Transfer *என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சமூக நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை தந்து செயலாக்கி வரும் மாண்புமிகு புரட்சித்*

தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, விருதுநகரில் உழைக்கும் மக்களுக்கான சேவை இல்லம் ஒன்று அமைத்திட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். உழைக்கும் மகளிர் எண்ணற்றவர்கள் இருக்கும் விருதுநகர் மாவட்டத்தில் இதுவரை தமிழக அரசால் நடத்தக்கூடிய உழைக்கும் மகளிருக்கான இல்லம் ஒன்றுகூட இல்லை. இருக்கும் 5 இல்லங்களில் ஒன்று ராஜபாளையத்திலும், ஒன்று சிவகாசியிலும், ஒன்று அருப்புக்கோட்டையைச் சார்ந்த சூலக்கரைமேட்டிலும் உள்ளன. மீதமுள்ள இரண்டும் விருதுநகரில் இருக்கின்றன. ஆனால், அந்த இரண்டுமே தனியாரால் நடத்தப்படுகின்றன. இன்று விருதுநகர் தொகுதியில் மட்டுமே உழைக்கும் மகளிர் குறைந்தது ஆயிரம் பேருக்கு மேல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே தமிழக அரசு ரூ.26.45 கோடியில் 20 உழைக்கும் மகளிர் சேவை இல்லங்களை, மற்ற மாவட்டங்களில் அமைத்திருக்கிறது. விருதுநகர் மாவட்டத்திலே அது மாதிரி ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சேவை இல்லம் என்பது 14 வயதுக்கு மேல் 45 வயதுக்கு உட்பட்டு சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தங்கியுள்ள விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற வளரிளம் பெண்கள், மாற்றுத் திறனுடைய பெண்கள் ஆகியோருக்காகத்தான் தொடங்கப்பட்டது. இந்த இல்லங்களில் கணவனால் கைவிடப்பட்டவர்களை 3 குழந்தைகளோடு அங்கே தங்க வைத்துக்கொள்ளலாம். அவர்கள் பெண் குழந்தைகளாக இருந்தால், 12 ஆம் வகுப்பு வரை இலவசமாக கல்வி அளித்து, தங்க வைத்து, உணவு வழங்கி, அந்தப் பிள்ளைகள் வளர்க்கப்படுகிறார்கள். ஆண் குழந்தைகளாக இருந்தால், 5 ஆம் வகுப்பு வரை அங்கேயே தங்கி இருந்து படித்துக்கொள்ளலாம். இதுதான் சேவை இல்லத்தினுடைய செயல்பாடுகள். இதிலே பயன்பெறக்கூடிய பயனாளிகள் இன்றைக்கு குறிப்பிட்ட குறியீட்டுக்குக் குறைவாக, அதாவது, 120 பேர் தங்கக்கூடிய அரசு இல்லங்களுக்கு வரக்கூடியவர்கள் குறைவாக அதாவது, 50 பேர்தான் இருக்கிறார்கள். மாண்புமிகு

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் கணவனால் கைவிடப்பட்டவர்கள், மாற்றுத் திறனுடையோர், ஆதரவற்றவர்கள், விதவைகள் இவர்களுக்காக பெரம்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களிலேயும் அரசு சேவை இல்லங்களை அதிகமாகத் தொடங்க உத்தரவிட்டு இன்றைக்கு அவையும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல விருதுநகரில் 5 இடங்களிலே மத்திய அரசு நிதியுதவியோடு இரண்டு பேரும், சொந்தப் பணத்திலேயே 3 பேரும் சேவை இல்லங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல விருதுநகர் மாவட்டத்திலே உழைக்கும் பெண்கள், ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்டவர்கள், இதுபோன்றவர்கள் அதிகமான எண்ணிக்கையில் இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதேபோல், அம்மா அன்பகம் என்ற பெயரில் இன்று 25 முதியோர்களுக்கும், 25 ஆதரவற்ற குழந்தைகளுக்கும் இணைந்து உருவாக்கப்பட்டிருக்கும் சேவை இல்லங்கள் விருதுநகர் மாவட்டத்திலே இப்பொழுது தனியார் பங்களிப்புடன் இரு இடங்களில் நடந்துகொண்டிருக்கின்றன. இது அம்மா அன்பகம் என்று நீங்களே பெயர் சூட்டி அழைத்த திட்டம். அதை மீண்டும் வலுப்படுத்தி, இன்னும் இரு இடங்களில் குறிப்பாக, விருதுநகர் தொகுதியில் உருவாக்கித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற முதியவர்கள், ஆதரவற்ற குழந்தைகள் இரண்டு பேரையும் ஒன்றாகச் சேர்ந்து,*

குழந்தைகள் 25 பேர், முதியவர்கள் 25 பேர் என்று தொண்டு நிறுவனங்களோடு இணைந்துதான் ஒருங்கிணைந்த வளாகங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன. அரசின் சார்பிலே நடத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, அதற்குரிய நடவடிக்கையை எடுப்பது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

மகளிர் கலைக் கல்லூரி

***50259 திருமதி எஸ். கணிதா சம்பத்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதியில் புதிதாக மகளிருக்கென்று தனியாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*